**O.S.No.19/2018**

**PW1 :** விஜயாபுரி தேதி 11.09.2025

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் சகோதரிகள் பாகப்பிரிவினை கோரி அ வ எண்.306/19 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் என் தந்தை 1ம் பிரதிவாதி, நான் 2ம் பிரதிவாதியாகவும் இருக்கிறோம். 30.3.2011 ல் எதிர் வாதம் அவ்வழக்கில் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். என் சகோதரிகளுக்கு எதிராக என்ன என்ன சங்கதிகள் சொல்லவேண்டுமோ அனைத்தையும் சொல்லி அந்த எதிர் வழக்குரையை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அதில 24.2.2025 ல் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். இவ்வழக்கை என் சகோதரிகள் மீது 11.1.2018 ல் தாக்கல் செய்தேன். நான் , என் தந்தை , என் சகோதரிகள் அனைவரும் சேர்ந்து குடும்ப ஏற்பாடு செய்து கொண்டாக சொல்லியிருக்கிறேன். 30.3.2011 எதிர் வழக்குரையில் குடும்ப ஏற்பாடு ஏப்ரல் 2000 ல் ஏற்பட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். குடும்ப ஏற்பாட்டில் பங்கு எடுத்து கொண்டவர்கள் பொன்முடியை சேர்ந்த பழனிசாமி என்று ஒரே பெயரை தான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். குடும்ப ஏற்பாட்டில் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட 2 ஏக்கர் 27 சென்டை விற்று அதில் வரும் பணத்தை கொண்டு என் சகோதரிகள் மற்றும் தந்தைக்கு தலா பாதி கொடுத்து விடுவதாக எதிர் வழக்குரையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த பணத்தை என் தந்தை ஏற்கனவே அவர் வங்கி கணக்கில் உள்ள தொகையுடன் வைப்பீடு செய்து விடுவதாக பேசப்பட்டது என்றால் சரிதான். 2000 ல் ஏப்ரலில் என் தந்தை வங்கியில் தொகை எவ்வளவு வைத்திருந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. என் அப்பா வங்கியில் தொகை வைத்து கொண்டு அவருடைய செலவிற்கு போதுமான அளவிற்கு அவர் வைத்திருந்ததாக எதிர் வழக்குரையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். விற்ற 2.27 சென்ட்

என் குடும்ப சொத்து அல்ல என்றால் சரிதான் என் தந்தை வழி பாட்டி சொத்து. அந்த சொத்தை 14.7.2000 ல் விற்றதாகவும் அதில் வந்த தொகையை 2 ஆக பிரித்து தந்தைக்கு பாதியும் சகோதரிகளுக்கு பாதியும் கொடுத்து விட்டதாக எதிர் வழக்குரையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். பஞ்சாயத்தார் அவ்வாறு தான் பைசல் பேசி முடித்தார்கள் என்றால் சரிதான். அந்த தொகையையும் என் தந்தை வங்கியில் **credit** செய்தாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ஏப்ரல் 2000 ல் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டின் படி சொத்தை விட்டு கொடுத்து என் தந்தை மட்டுமே என்று என்னுடைய எதிர் வழக்குரையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் 7 ம் பத்திரமாக மேற்படி சொத்தை கிரையம் பெற்ற பத்திரமாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அதில் காட்டப்பட்ட கிரைய தொகை ரூ. 112500/- என்றால் சரிதான். ஆனால் ரூ.3 லட்சத்திற்கு விற்கப்பட்டது. ரூ.3 லட்சத்திற்கு விற்கப்பட்டதாக எதிர் வழக்குரையில் சொல்லவில்லை. அதே வழக்கில் கூடுதல் எதிர் வழக்குரையில் முதலில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் சங்கதிகளுக்கு முற்றும் மாறுபட்டு சங்கதிகள் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். கூடுதல் எதிர் வழக்குரையில் ஆங்கில மாதத்தை விட்டு விட்டு தமிழ் மாதம் வைகாசியில் குடும்ப ஏற்பாடு செய்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். கூடுதல் எதிர் வழக்குரையில் பழனிசாமி, அர்ஜூனன், சதாசிவம் மற்றும் பலர் பஞ்சாயத்தார் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். மற்றும் பலர் என்று எதற்காக சொல்லியிருக்கிறேன் என்றால் மேற்படி மூவரும் சாட்சிக்கு வரவில்லை என்றால் வேறு நபர்களை சாட்சியாக விசாரித்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில் அவ்வாறு சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என்னுடைய பிராதில் மற்றும் சிலர் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். மற்றும் பலர் என்று நான் இவ்வழக்கில் சொல்லவில்லை என்பதால் வேறு நபர்கள் யாரும் பஞ்சாயத்தார் அல்ல என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய குடும்பத்தில் குடும்ப ஏற்பாடு செய்யும் அளவிற்கு சண்டை சச்சரவு வரவில்லை என்றால் சரிதான். பஞ்சாயத்தார் வைத்து பஞ்சாயத்து பேசும் அளவிற்கு பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரிதான். வாய்மூலமான குடும்ப ஏற்பாடு எதுவும் நடக்கவில்லை என்று

சொன்னால் சரியல்ல. பஞ்சாயத்து எங்கு நடந்தது என்றால் என் அப்பா வீட்டில் காலை 10 மணிக்கு நடந்தது. அதில் 6 பஞ்சாயத்தார் இருந்தார்கள். அவர்களின் பெயரும் தெரியும். என்ன நடந்தது என்றால் என் அப்பா தோட்டத்தை என்னையே ஓட்டி கொள்ளும்படி சொன்னார். ரூ.10 லட்சம் அவருக்கு கொடுக்கும்படி சொன்னார். ரூ.10 லட்சம் பணம் கேட்டார் என்ற விவரத்தை அ வ எண். 306/19 வழக்கில் நான் சொல்லவில்லை. நான் ரூ.10 லட்சம் கொடுப்பதாக சொன்னேன். முதலில் ரூ.15 லட்சம் கேட்டார். என் அப்பா ரூ.15 லட்சம் கேட்டதாக அ வ எண்.306/19 வழக்கில் எதிர் வழக்குரையில் சொல்லவில்லை. இந்த வழக்கின் பிராதிலும் சொல்லவில்லை. பெண் பிள்ளைகள் இருப்பதால் பின் நாட்களில் பிரச்சனை வரும் என்றும் அப்பா காலத்திற்கு பின்னிட்டு பெண்களுக்கு கொடுத்து விட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் எனக்கு வரவில்லை என்றால் ஆம் அவ்வாறு வரவில்லை என் தந்தை நல்லவர். என் மகள் தாக்கல் செய்த வழக்கிலும் நான் தாக்கல் செய்த வழக்கிலும் என் தந்தை குடும்ப ஏற்பாடும் நடக்கவில்லை ரூ.10 லட்சம் பணமும் வாங்கவில்லை என்று எதிர் வாதம் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். என் அப்பா இறக்கும் வரை நானும் என் அப்பாவும் பிரியமாக இருந்ததாக முந்தைய விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். குடும்ப ஏற்பாட்டிற்கு நான் ஆவணம் எழுதி கொள்ளலாம் என்று கேட்டேனா என்றால் கேட்டேன். நமக்குள் என்ன என்று என் அப்பா சொல்லிவிட்டார். பஞ்சாயத்தார் அழைத்து வர வேண்டிய அவசியம் என்ன என்றால் என் அப்பா தான் அழைத்தார். குடும்ப ஏற்பாடு ஏற்பட்டதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தனிப்பட்ட சொத்தாக பாவித்து எவ்வித பாராதீனமும் செய்யவில்லை என்றால் சரிதான். குடும்ப ஏற்பாடு ஏற்படவில்லை என்பதால் தான் நான் பாராதீனம் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. கூடுதல் எதிர் வாதம் மற்றும் பிராதில் என் அப்பாவிற்கு முதலில் ரூ.3 லட்சம் பணம் கொடுத்ததாகவும், பின்னிட்டு ரூ.3 லட்சமும், பின்னிட்டு ரூ.4 லட்சம் கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு வங்கி ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. மற்றவர்களிடம் கடன் வாங்கி கொடுத்தேன். யாரிடம் கடன் வாங்கினேன் என்று சொல்லமுடியாது என்றால்

சரியல்ல சொல்ல முடியும். மேற்படி ரூ.3 லட்சம், பின்னிட்டு ரூ.3 லட்சமும், பின்னிட்டு ரூ.4 லட்சம் என் தந்தைக்கு கொடுத்ததாக அ வ எண்.306/2019 வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு நான் தவணை முறையில் நான் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போர்வெல் போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தை தான் போட்டார் என்றால் சரியல்ல. என் தந்தை தான் போர்வெல் அமைத்து மோட்டார் பொருத்தினார் என்றால் சரியல்ல. நான் வீடு கட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் அந்த வீட்டை என் அப்பா தான் கட்டினார் என்றால் சரியல்ல. நான் போக வர இருந்ததால் என் அப்பா வீடு கட்டவும் போர்வெல் அமைக்கவும் என் அப்பா கொடுத்த பணத்தை கொண்டு நான் என் பெயரில் ரசீதுகள் பெற்று கொண்டேன் என்றால் சரியல்ல. மின் இணைப்பு என் அப்பா பெயரில் தான் உள்ளது. 2000 ல் சொத்து என் பெயரில் வந்ததாக சொல்லப்பட்ட பிறகு நாளது வரை வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து பட்டா பெறவில்லை என்றால் எனக்கும் என் அப்பாவிற்கும் மன வருத்தம் ஏற்பட்டதால் பட்டா வாங்கவில்லை. 2006 ல் இருந்து எனக்கும் என் அப்பாவிற்கும் மன வருத்தம். 2006 ல் இருந்து நான் என் அப்பா மீதும் என் அ்பபா என் மீதும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து கொண்டிருந்தோம் என்றால் சரிதான். ஊருக்குள் பிரச்சனை செய்ததால் என் அப்பா என் மீது அவர் மண்டையை உடைத்து விட்டதாக புகார் கொடுத்தார். நான் என் அப்பா மண்டையை உடைக்கவில்லை. என் அப்பா பொய் வழக்கு கொடுத்தாக சொல்கிறேன். நான் என் அப்பா மீது ஒரு புகாரும் கொடுக்கவில்லை. கிணற்று நீரை என் தந்தையின் மீது உள்ள பிரச்சனை காரணமாக நானும் என் அப்பாவும் நீர் இறைப்பதில்லை என்றால் சரியல்ல. என் தந்தை எவ்வளவு தொகை வைத்திருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. ரூ.20 லட்சம் ஸ்டேட் பாங்கிலும் , ரூ.20 லட்சம் பாங்க் ஆப் பரோடாவில் இருக்கிறது என்றால் சரிதான். எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் பாங்கில் விசாரித்த வகையில் தெரிந்து கொண்டேன். என் அப்பா இறப்பதற்கு 2 நாட்களுக்கு முன்பாக பணத்தை எடுத்து கொண்டார்கள் என்று தெரிந்து கொண்டேன்.

வங்கியில் அதற்கான ஆவணம் வாங்க முயற்சி செய்தேனா என்றால் இல்லை. சாட்சி பின்னிட்டு வங்கியிடம் ஆவணம் கேட்டதாகவும் அதை அவர்கள் கொடுக்க மறுக்கவிட்டதாகவும் சொன்னார். என் தந்தைக்கு ரூ.40 லட்சம் எவ்வாறு வந்தது என்றால் பணம் இருந்ததாக சொந்த பந்தம் சொன்னார்கள். ரூ.40 லட்சம் இருந்ததாகவும் அதை என் சகோதரிகளுக்கு என் தந்தை கொடுத்தாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கோழி வியாபாரம் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் எந்த காலத்திலும் கோழி வியாபாரம் செய்யவில்லை என்றால் சரியல்ல. கோழி, மாடு வியாபாரம் செய்வதற்கு ஆதாரம் எனதுவும் இல்லை. கோழி பண்ணை அமைக்க அரசு அனுமதி வாங்கவேண்டும் என்றால் சட்டம் வந்த பிறகு நான் வாங்கவில்லை. அந்த சட்டம் எப்போது வந்தது என்றால் அது எனக்கு தெரியாது. 2010 ம் வருடத்தில் இருந்து கோழி பண்ணை அமைப்பதை நிறுத்திவிட்டேன். கோழி , மாடு வியாபாரம் என் அப்பா தான் செய்தார் என்றால் சரியல்ல. என் தந்தை நல்ல வசதியாக வங்கியில் பணம் வைப்பீடு செய்யும் அளவிற்கு வருமானத்தில் இருந்தார் என்றும் என்னிடம் பணம் வாங்கி வாழ வேண்டிய அவசியத்தில் அவர் இல்லை என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்து என் அப்பா பெயரில் கிரையம் கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன். அது எந்த வருடம் என்றால் 1987. யாரிடம் இருந்து கிரையம் வாங்கப்பட்டது என்றால் சின்னமுத்துகவுண்டர் மற்றும் அவருடைய வாரிசுகள் சுசிலா, இந்திராணி, குழந்தையாம்மாள் ஆகியோரிடம் இருந்து கிரையம் வாங்கியது. மேற்படியாளர்களை என் தரப்பில் விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை. 1987 கிரையம் வாங்கிய காலகட்டத்தில் எனக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். மேற்படி காலகட்டத்தில் என்னிடம் தனிப்பட்ட வருமானம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி கிரையத்தை நான் மேஜராக இருந்ததால் என் பெயரில் கிரையம் வாங்கி இருக்கலாமே என்றால் என் அப்பா அவருடைய பெயரில் கிரையம் செய்து கொள்கிறேன் என்று சொன்னதால் என் அப்பா பெயரில் கிரையம் வாங்கப்பட்டது. அப்போது எங்களுக்கு எவ்வளவு விஸ்தீரண சொத்து ஏற்கனவே இருநத்து என்றால் 14 ½ ஏக்கர் இருந்தது. ஏற்கனவே இருந்த

பூமியில் கிணறு இருந்தது போர் இல்லை. என் தந்தை அவருடைய கைப்பணத்தை வைத்து கிரையம் வாங்கினார் என்றும் அந்த காலகட்டத்தில் எனக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 1983 ல் கோழி பண்ணை ஆரம்பித்து விட்டேன் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3 போர் எப்போது போட்டது என்று என்னுடைய எதிர் வாதத்திலோ இந்த வழக்கின் பிராதிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி போர் செலவை என் அப்பா தான் செய்தார் என்றால் சரியல்ல. பஞ்சாயத்தார் 3 பேரையும் விசாரிக்க போகிறேனா என்றால் விசாரிக்க போவதில்லை. வர மாட்டோம் என்று சொல்லிவிட்டார்களா என்றால் நான் கூப்பிட வில்லை. ஏன் கூப்பிடவில்லை என்றால் அதற்கு காரணம் எதுவும் இல்லை. மேற்படி மூவரும் பஞ்சாயத்து எதுவும் செய்யவில்லை என்பதால் தான் அவர்களை விசாரிக்கவில்லை என்றும் நானாகவே அவர்களுடைய பெயரை எழுதி கொண்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் நான் அவர்களை சாட்சியாக அழைக்கவில்லை என்றும் அவர்கள் வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் எந்த தொகையையும் என் தந்தைக்கும், என் சகோதரிக்கும் எக்காலத்திலும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் தொகை கொடுத்ததாக சொல்லப்படும் விவரங்களை முரண்பாடாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இன்று சாட்சியாக அழைத்து வந்தவர் என் சின்னம்மா மகன் ஈஸ்வரன். அவருக்கும் என் சகோதரிகளுக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரியல்ல. பைசல் பேசி முடிப்பதற்கு காலை 10 மணிக்கு ஆரம்பித்து மதியம் 12 மணிக்கு முடிந்தது என் அப்பாவின் பூர்வீக வீட்டில் நடந்தது. என் அப்பாவும் சகோதரிகளும் பிரிவினை செய்து கொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எப்போது தெரிய வந்தது என்றால் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு மாதத்ததிற்கு முன்பாக தெரிய வந்தது. என் சகோதரிகள் பட்டா மாறுதல் செய்த போது என் பக்கத்து நிலத்துகாரர் சொன்னதன் பெயரில் தெரிய வந்தது. நான் தெரிந்த பிறகு வில்லங்கம் போட்டு பார்த்தேன். என் சகோதரிகள் தாக்கல் செய்த வழக்கு அ வ எண்.306/19 (பழைய எண்.222/2010) என் சகோதரிகளும் , என் தந்தையும் 2010 பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றும் அந்த

பிராதில் சொல்லப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கில் என் அப்பா 1 ம் பிரதிவாதியாக தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் மேற்படி பாகப்பிரிவினை குறித்து சொல்லியிருக்கிறார் என்று சொன்னால் ஆம் அவ்வாறு தான் சொல்லியிருக்கிறார். 2018 ல் தான் எனக்கு தெரிய வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் சகோதரிகளுக்கு சேர வேண்டி 4/5 பாகத்தை கொடுப்பதை தவிர்ப்பதற்காக நான் குடும்ப ஏற்பாடு நடந்ததாகவும் அதன் அடிப்படையில் நான் அதை அனுபவித்து வருவதாகவும் என் அப்பாவிற்கு பணம் கொடுதத்தாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மொத்தம் 20 ஏக்கரில் நான் 4 ஏக்கரும் மீதம் உள்ளதை என் சகோதரிகளும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் ஓட்டி வருவதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆகவே இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் அ வ எண் 306/19 வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**O.S.No.19/2018**

**PW2 : ஈஸ்வரன்** தேதி 11.09.2025

வாசா 2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் விஜயாபுரியின் பெரியம்மா மகன். எனக்கும், பூங்கொடி, ருக்மணி, தனலட்சுமி போக்குவரத்து இல்லை என்றால் சரியல்ல போக்குவரத்து உள்ளது. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்ற அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. விஜயாபுரி சொல்ல வேண்டிய விவரங்களை சொல்லி கொடுத்தாரா என்றால் இல்லை நானாக வந்தேன். வைகாசி மாதம் 2000 வருடத்தில் பெரியண்ணகவுண்டர் ( விஜயாபுரியின் தந்தை) வந்து அழைத்தார் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். பெரியண்ணகவுண்டர் தோட்டத்தில் கோழி பண்ணை அமைத்திருந்தார் என்றால் இல்லை. அவர் நடமாடி நல்ல ஆரோக்கியத்துடன் பூமிக்கு போகவர இருந்தார் என்றால் சரிதான். விஜயாபுரியும் அவருடைய அப்பாவும் பூமியை தனிதனியாக ஓட்டினார்களா என்றால் ஒன்றாக தான் ஓட்டினார்கள். பெரியண்ணகவுண்டருக்கு வருமானம் வந்தது என்றால் அதிகபடியான வருமானம் இல்லை. பூமியில் வரும் வருமானத்தை பெரியண்ணகவுண்டர் எடுத்து கொள்வாரா என்றால் இருவரும் சேர்ந்து தான் எடுத்து கொள்வார்கள். 2000 ம் வருடம் வரை பெரியண்ணகவுண்டர் பூமி வருமானத்தை எடுத்து கொண்டார். எப்போது என்னை வந்து அழைத்தார் என்றால் 10 நாளைக்கு முன் அழைத்தார். மற்றவர்களையும் அழைத்து வருவதாக சொன்னார். எத்தனை பேர் பைசல் செய்தோம் என்றால் 6 பேர் இருந்தோம். பெயர் தெரியுமா என்றால் தெரியும். பாலகிருஷ்ணன் , பழனிசாமி, அர்ஜூனன், ரத்தினசாமி, நான், சதாசிவம் ஆகியோர். பாலகிருஷ்ணன் பக்கத்து பூமிக்காரர். பைசல் செய்ய வேண்டிய காரணம் என்ன அவர்களுக்கிடையே தகராறா என்றால் அவரால் விவசாயம் செய்யமுடியவில்லை என்றும் அதற்காக பணத்தை மகன் கொடுக்க வேணடும் என்று சொல்லி அழைத்தார் அவர்களுக்கிடையே தகராறு இல்லை. பெரியண்ணகவுண்டர் அவர் மகனிடம் பணம் கேட்டதாகவோ அவர் மறுத்தாகவோ எங்களிடம் சொல்லவில்லை

பைசல் செய்ய வேண்டிய சூழ்நிலையோ இல்லை என்றும் அவ்வாறு பைசல் நடைபெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ரூ.10 லட்சம் கொடுக்க வேண்டியது என்று சொன்னார். சொத்தை விற்று கொடுக்க வேண்டும் என்று சொன்னார். எவ்வளவு ஏக்கர் விற்றார் என்றால் 3 ½ ஏக்கர் விற்றார். பைசல் பேசியதற்கு பிறகு 3 ½ ஏக்கர் விற்கப்பட்டதா என்றால் ஆமாம். யாருக்கு விற்றார் என்றால் அது தெரியாது. பைசல் பேசி எவ்வளவு நாட்கள் கழித்து விற்கப்பட்டது என்றால் 15 – 20 நாளில் விற்கப்பட்டது. ரூ.10 லட்சம் ஒரே தவணையாக கொடுத்து விட்டாரா என்றால் 3 தவணையாக கொடுத்தார். ஏன் 3 தவணையாக கொடுத்தார் என்றால் 3 தவணையாக பேசப்பட்டதால் அவ்வாறு கொடுத்தார். எவ்வளவுக்கு கிரையம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி தொகை கொடுக்கும் போது நான் உடன் இல்லை என்றால் இருந்தேன். எந்த தொகையும் விஜயாபுரி கொடுக்கவில்லை என்றும் பைசலும் நடக்கவில்லை என்றும் நான் கலந்து கொள்ளவில்லை என்றும் இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு தலா ரூ.50 ஆயிரம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றும் வேறு யாரும் சாட்சி சொல்ல வராததால் பஞ்சாயத்தார் என்று பஞ்சாயத்தில் நான் கலந்து கொண்டதாக விஜயாபுரி பிராதில் சொல்லாத நிலையில் நான் தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளித்து அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.